# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 11.03.2026**

**அசல் வழக்கு எண். 295/2012**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எனது தரப்பில் புதிதாக ஒரு ஆவணம் சான்றாவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சாஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால்எனக்கு பாத்திய்பபட்டது. பி.வா.சாஆ.10 ஆவணம் மூலம் நான் யாருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் நான் யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. பி.வா.சாஆ.10 ஆவணம் மூலம் நான் கிரையம் பெற்றேன். பி.வா.சாஆ.10 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கை காலதாமதப்படுத்தும் என்ற நோக்கத்தோடு பி.வா.சாஆ.10 ஆவணம் என்னால் தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றாலும் சரியல்ல. நான் எனது கூடுதல் நிரூபண உறுதிக்கூற்றில் பி.வா.சாஆ.10 ஆவணம் பொறுத்து தெரிவித்துள்ள விபரங்கள் அந்த ஆவணத்தில் துலங்காது என்றால் சரியல்ல. பி.வா.சாஆ.10 ஆவணம் வழக்கிற்கு சம்பந்தமற்ற ஆவணம் என்றாலும், வாதிகளின் வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றாலும், பிரதிவாதி கோரியுள்ள எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**